SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

# DAILY CURRENT AFFAIRS ON 14/MARCH/2026



# உடன்குடியில் ரூ.13,077 கோடியில் புதிய அனல் மின் நிலையம்

**உற்பத்தியைத் தொடங்கி வைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**சென்னை, மார்ச் 13:** தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் ரூ.13,077 கோடியில் அமைக்கப்பட்டுள்ள புதிய அனல் மின் நிலையத்தின் உற்பத்தியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் காணொலி முறையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இரு 660 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மின் நிலையத்தை அவர் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

தமிழ்நாட்டில் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் தொடர் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, உடன்குடியில் ரூ.13,077 கோடியில் பாரத மிகுமின் நிறுவனம் (பெல்) வாயிலாக இரு 660 மெகாவாட்




தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள அனல் மின் நிலையத்தை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக வெள்ளிக்கிழமை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனங்களின் தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன், எரிசக்தித் துறைச் செயலர் மங்கத் ராம் சர்மா.

# 'அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம்': தொண்டர் தொடங்கிய கட்சியை வழிநடத்துகிறார் சசிகலா

**சென்னை, மார்ச் 13:** 'அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம்' என்ற பெயரில் தொண்டர் ஒருவர் ஏற்கெனவே தொடங்கிய கட்சியில் இணைந்து, அந்தக் கட்சியை வழிநடத்த உள்ளார் வி.கே.சசிகலா.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 'தென்னந்தோப்பு' சின்னத்தில் போட்டியிடுவதாகத் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் கடந்த பிப். 24-ஆம் தேதி புதிய கட்சியை வி.கே.சசிகலா தொடங்கினார். அப்போது அவர் கட்சியின் பெயரை அறிவிக்கவில்லை. கொடியை மட்டும் அறிமுகப்படுத்தினார்.

இந்த நிலையில், சென்னை போயஸ் கார்டனில் உள்ள அவரது இல்லத்தில் செய்தியாளர்களை வெள்ளிக்கிழமை சந்தித்த சசிகலா, செய்தியாளர்களிடம்




சென்னை போயஸ் தோட்ட இல்லத்தில் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக கட்சியின் சின்னத்தை வெள்ளிக்கிழமை வெளியிட்ட வி.கே.சசிகலா.

# மாநில தகவல் ஆணையராக அ.விஜயராம் நியமனம்

**சென்னை, மார்ச் 13:** தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் மாநிலத் தகவல் ஆணையராக அ.விஜயராமை, ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் நியமித்துள்ளார். அவர், வெள்ளிக்கிழமை பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இதுகுறித்த ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் காலியிடங்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 கீழ், ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர், அ.விஜயராமை மாநிலத் தகவல் ஆணையராக நியமித்துள்ளார்.

தொடர்ந்து அ.விஜயராம், சென்னை ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் முன்னிலையில் மாநிலத் தகவல் ஆணையராக பதவிப் பிரமாணம் ஏற்றுக்கொண்டார்.

நிகழ்வில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் மாநிலத் தலைமைத் தகவல் ஆணையர் முகம்மது ஷகீல் அக்தர், மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் சி. சமயமூர்த்தி, ஆளுநரின் முதன்மைச் செயலர் ஆர். கிர்லோஷ் குமார், மாநில தகவல் ஆணையத்தின் மற்ற ஆணையர்கள் ஆகியோர் உடனிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்வேறு பதவிகளுக்கு முக்கியமான வயதுவரம்புகள்

| | |
|---|---|
| ஜனாதிபதி | 35 ஆண்டுகள் |
| ஜனாதிபதி துணைத் தலைவர் | 35 ஆண்டுகள் |
| ஆளுநர் | 35 ஆண்டுகள் |
| பிரதமர் | 30/25 ஆண்டுகள் |
| முதலமைச்சர் | 25 ஆண்டுகள் |
| MP (எம்பி) (ராஜ்யசபா) | 30 ஆண்டுகள் |
| MLC | 30 ஆண்டுகள் |
| MP (லோக்சபா) | 25 ஆண்டுகள் |
| MLA (எம்எல்ஏ) | 25 ஆண்டுகள் |
| பஞ்சாயத்து தலைவர் | 21 ஆண்டுகள் |

## இந்தியாவிற்கே வழிகாட்டும் தமிழ்நாடு

### 42% பெண்கள் வேலைவாய்ப்பு!

**இந்திய உற்பத்தித் துறையில் பணிபுரியும் பெண்களில் 42% பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது நமது மாநிலத்தின் மாபெரும் சாதனை.**

டாடா பவர் சோலார் போன்ற நிறுவனங்கள் 95% பெண்களுடன் இயங்குவது பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பதற்கான சிறந்த உதாரணமாக திகழ்கிறது.

தமிழ்நாடு அரசு பெண்களின் உரிமையையும் அதிகாரத்தையும் வெறும் சொல்லாக இல்லாமல் மாபெரும் சாதனையாக மாற்றியுள்ளது.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் சமூக வலைதள பதிவு



### இரு குழுக்களின் ஒப்பீடு

| ஒப்பீட்டு அம்சம் | ராஜமன்னார் குழு (1969) | குரியன் ஜோசப் குழு (2025-26) |
|---|---|---|
| காலம் / அரசு | திமுக அரசு (முதலமைச்சர் மு. கருணாநிதி) | திமுக அரசு (முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்) |
| தலைமை மற்றும் காலம் | பி.வி. ராஜமன்னார்; 1969-ல் அமைக்கப்பட்டு 1971-ல் அறிக்கை அளிக்கப்பட்டது. | நீதியரசர் குரியன் ஜோசப்; 2025-ல் அமைக்கப்பட்டு 2026-ல் முதல் கட்ட அறிக்கை (Part-1 Report) அளிக்கப்பட்டது. |
| தலைவர் | பி.வி. ராஜமன்னார் (முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி) | குரியன் ஜோசப் (முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி) |
| சூழல் | 1967-ல் காங்கிரஸ் அல்லாத அரசுகள் பல மாநிலங்களில் அமைந்த பிறகு ஏற்பட்ட மோதல்கள். | GST, நீட் (NEET), மற்றும் மாநில எல்லை மாற்றம் (விதி 3) போன்ற நவீன கூட்டாட்சி சிக்கல்கள். |
| ஆளுநர் பதவி | ஆளுநர் பதவி தேவையற்றது என்று கூறவில்லை, ஆனால் நியமனத்தின் போது மாநில அமைச்சரவையைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்றது. | ஆளுநர் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க 15 நாட்கள் காலக்கெடு விதிக்கப்பட வேண்டும்; மீறினால் அது தானாகவே நிறைவேறியதாகக் (Deemed Assent) கருதப்பட வேண்டும். |

## ASSISTANT PUBLIC PROSECUTOR EXAM @ 2026

Consider the statements in the "PRAGATI platform", choose the correct answer :

1. This is the proactive Governance and Timely implementation platform
2. It combines the traditional engineering tools to timely implementation of infrastructure projects
3. It combines AI, Big-Data analytics to timely implementation of the project
4. "Pragati" platform was launched in the year 2015.

(A) 2 and 4 only
(B) 1 only
(C) 2, 3, 4 only
✓(D) 1, 3 and 4 only
(E) Answer not known

"பிரகதி தளம்" (Pragati Platform) பற்றிய கூற்றுக்களை கருதுக, சரியான கூற்றினை கண்டறிக.

1. இதுவோர் செயலூக்கம்சார் ஆளுகையும், உரிய காலத்திற்குள் பணிகளை முடிக்கும் தளமாகும்
2. இத்தளமானது உள்கட்டமைப்பு திட்டப் பணிகளை முடிப்பதற்கு தொன்மையான பொறியியற் கருவிகளை இதனுடன் இணைக்கிறது
3. இந்த தளமானது, செயற்கை நுண்ணறிவு, பேரளவு தரவு பகுப்பாய்வு ஆகியவற்றை, உரிய காலத்திற்குள் முடிக்க, அந்த திட்டப் பணிகளுடன் இணைக்கிறது
4. இந்த பிரகதி தளமானது 2015 ஆம் ஆண்டு துவங்கப்பட்டதாகும்.

(A) 2 மற்றும் 4 மட்டும்
(B) 1 மட்டும்
(C) 2, 3, 4 மட்டும்
(D) 1, 3 மற்றும் 4 மட்டும்
(E) விடை தெரியவில்லை



Point out the objective/s of the recently implemented PM Vishwakarma programme?

(i) Promoting mass industrial production

(ii) Providing financial support to artisans

(iii) Encourage skill development and training

(A) (i) only

(B) (ii) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (i) and (iii) only

(E) Answer not known

சமீபத்தில் செயல்படுத்தப்பட்ட பிரதம மந்திரி விஸ்வகர்மா திட்டத்தின் நோக்கங்களை கண்டறிக

(i) பெருமளவிலான தொழில்துறை உற்பத்தியை ஊக்குவித்தல்

(ii) கைவினைஞர்களுக்கு நிதி உதவி வழங்குதல்

(iii) திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியை ஊக்குவித்தல்

(A) (i) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (i) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை







**Which state became the first in India to introduce voting through a mobile application in local body elections?**

A) Kerala
B) Bihar
C) Gujarat
D) Karnataka

**இந்தியாவில் முதன்முதலில் உள்ளாட்சித் தேர்தல்களில் மொபைல் செயலி மூலம் வாக்களிக்கும் முறையை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?**

அ) கேரளா
ஆ) பீகார்
இ) குஜராத்
ஈ) கர்நாடகா







The **Pradhan Mantri Shram Yogi Maandhan (PMSYM) scheme is mainly intended to:**

A) Provide housing for migrant workers
B) Provide pension and financial security to workers in the unorganised sector
C) Provide crop insurance to farmers
D) Provide scholarships to students

**பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்தன் (PMSYM) திட்டம் முக்கியமாக நோக்கமாகக் கொண்டது:**
A) புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி வழங்குதல்
B) அமைப்புசாரா துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் நிதி பாதுகாப்பை வழங்குதல்
C) விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வழங்குதல்
D) மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குதல்








**The SMILE Scheme launched by the Ministry of Social Justice and Empowerment primarily aims to:**

A) Provide free housing for rural families
B) Support the rehabilitation and livelihood of transgender persons and people engaged

**சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட SMILE திட்டம் முதன்மையாக நோக்கமாகக் கொண்டது:**
A) கிராமப்புற குடும்பங்களுக்கு இலவச வீடு வழங்குதல்
B) திருநங்கைகள் மற்றும் பிச்சை எடுப்பதில் ஈடுபட்டுள்ளவர்களின் மறுவாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தை

<table>
<tr>
<td>in begging<br>C) Promote digital literacy in villages<br>D) Provide crop insurance for farmers</td>
<td>ஆதரித்தல்<br>C) கிராமங்களில் டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்தல்<br>D) விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு வழங்குதல்</td>
</tr>
<tr>
<td>
</td>
<td>
</td>
</tr>
<tr>
<td>The PM Dhan-Dhaanya Krishi Yojana primarily aims to:<br><br>A) Promote urban infrastructure development<br>B) Increase industrial exports<br>C) Provide free electricity to farmers<br>D) Boost agricultural productivity and sustainable farming practices</td>
<td>பிரதம மந்திரி தன்-தன்யா க்ரிஷி யோஜனா முதன்மையாக நோக்கமாகக் கொண்டது:<br>A) நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டை ஊக்குவித்தல்<br>B) தொழில்துறை ஏற்றுமதியை அதிகரித்தல்<br>C) விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்<br>D) விவசாய உற்பத்தித்திறன் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளை அதிகரித்தல்</td>
</tr>
<tr>
<td>
</td>
<td>
</td>
</tr>
</table>

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

| | |
|---|---|
| **Consider the following statements about the PM MITRA Scheme:**<br><br>1. The scheme aims to establish seven textile parks across India.<br>2. One of the parks will be established in Virudhunagar in Tamil Nadu.<br>3. The scheme aims to create around three lakh jobs in each park and boost textile exports and investments.<br><br>Which of the statements given above are correct?<br><br>A) 1 and 2 only<br>B) 2 and 3 only<br>C) 1 and 3 only<br>D) 1, 2 and 3 | **PM MITRA திட்டம் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கவனியுங்கள்:**<br>1. இந்தத் திட்டம் இந்தியா முழுவதும் ஏழு ஜவுளிப் பூங்காக்களை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.<br>2. தமிழ்நாட்டின் விருதுநகரில் பூங்கா ஒன்று நிறுவப்படும்.<br>3. இந்தத் திட்டம் ஒவ்வொரு பூங்காவிலும் சுமார் மூன்று லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி ஜவுளி ஏற்றுமதி மற்றும் முதலீடுகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |







The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

# மனபலமே வெற்றிக்கு வழி !

பெ. சுப்ரமணியன்

இன்றைய இளைஞர்கள் புரிந்து கொள்ள முடியாத வேகத்தில் பயணிக்கும் உலகில் வாழ்ந்து வருகின்றனர். வளர்ந்துவரும் புதிய துறைகளுக்கேற்ப தகவல்களைச் சேகரிக்கவும், கற்றுக்கொள்ளவும் வேண்டிய கட்டாயம் அதிகரித்து வருகிறது.

தேர்வு செய்வதற்கும், பணிபுரிவதற்கும், வேண்டிய தகவல்களைப் பெற இணைய தளம் எனப் பல்வேறு சாதகமான அம்சங்கள் இருந்தும், இன்றைய மாணவப் பருவத்தினர் மன அழுத்தத்துக்கு உள்ளாகும் போக்கு அதிகரித்து வருகிறது.

மன நலன் தொடர்பாக வெளியாகும் ஆய்வு முடிவுகள், புள்ளிவிவரங்கள் அதிர்ச்சி அளிக்கின்றன. 10 முதல் 20 சதவீத குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினர் மன நல பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் பிரச்னைகள் குறித்துப் பேசவோ, தீர்வு காணவோ யாருடைய உதவியையும் நாடுவதில்லை எனவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் சமீபத்திய ஆய்வுகளின்படி, உலக அளவில் 100 கோடிக்கும் அதிகமானோர் மன நல பாதிப்புகளுடன் வாழ்கின்றனர். 2011-2021-ஆம் ஆண்டு காலகட்டத்தில் உலக மக்கள்தொகை வளர்ச்சியைவிட மன நலப் பிரச்னைகளின் பரவல் வேகமாக அதிகரித்துள்ளதாகவும், 20-29 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களிடையே மனநலப் பிரச்னை 1.8 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பண்பாட்டின் அடையாளமாக இருந்த கூட்டுக் குடும்ப முறை சிதைந்து போனதும் காரணமாகும். தாத்தா, பாட்டி, அத்தை, மாமா, சித்தப்பா, சித்தி என்றெல்லாம் பல்வேறு உறவுகளுடன் இருந்த குடும்பம், இன்று மூவரும், நால்வருமாக வாழும் நிலைக்கு மாறிவிட்டது.

பொதுவாக, மனநலப் பிரச்னைகளால் பாதிக்கப்படுவோர்களில், 50 சதவீதம் பேருக்கு 14 வயதிலேயே அத்தகைய பாதிப்பு தொடங்குவதாகவும், இந்த நிலை கவனிக்கப்படாமல் தொடர்ந்தால் 15 வயது முதல் 19 வயதாகும்போது அவர்களுக்கு தற்கொலை எண்ணம் ஏற்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

13 வயது முதல் 17 வயதுக்குட்பட்ட 9 லட்சம் இந்திய இளைஞர்களுக்கு மன நலக் கவலைகள் இருப்பதாக மன நலன் குறித்த தேசிய அளவிலான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தேர்வுக்கும், தேர்வு முடிவுக்குமான பயம், காதல் தோல்வி போன்றவற்றால் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுதல், இத்தகைய வயதில்தான் ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கடந்த 2023-இல் 1.7 லட்சம் பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அவர்களில் 13,892 பேர், அதாவது 8.1 சதவீதத்தினர் மாணவர்களாவர். 2013-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், பத்தாண்டுகளில் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது 65% அதிகரித்துள்ளது. என்ஐடி, ஐஐடி போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவிடம் பல்வேறு காரணிகள் தங்களை மன ரீதியாகப் பாதிப்பதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். 65 % உயர் கல்வி நிறுவனங்களில் மனநல ஆலோசகர்கள் இல்லை என்பது ஆய்வின்போது தெரியவந்தது.

உயர் கல்வி நிலையங்களில் நிலவும் இந்நிலைக்கு இன்றைய இளைய தலைமுறையினரிடம் மனவலிமை இல்லாததே முக்கிய காரணமாகும். இதனால், சிறிய அளவிலான பிரச்னைக்குக்கூட தீர்வு காண முடியாததுடன் எல்லாவற்றுக்கும் தற்கொலை செய்து கொள்வதே தீர்வு என்றும் எண்ணுகின்றனர். அண்மைக்காலமாக இணையதள விளையாட்டுகளின் பிடியிலிருந்து வெளிவர முடியாமல் மன அழுத்தத்துக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொள்ளும் நிலை உருவாகியுள்ளது.

பொதுவாக நமது சிந்திக்கும் திறன், உணரும் திறன், செயல்படும் திறன் போன்றவை மன வலிமையுடன் இணைந்து செயல்படும் காரணிகளாக உள்ளன. மன வலிமை இருக்கும்போது விரும்பத்தகாத, சிக்கலான நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கும், தீர்வு காண்பதற்கும் தேவையான சக்தியை அது நமக்கு அளிக்கும்.

இன்றைய இளைஞர்கள் குறிப்பாக மாணவப் பருவத்தினர் கவனம் சிதறிப் போயிருக்கின்றனர். நினைத்ததெல்லாம் நடக்க வேண்டும், அதுவும் சுலபமாகக் கிடைக்க வேண்டும், எதற்கும் தாமதம் கூடாது, எந்த பிரச்னையும் எழக்கூடாது என்கிற எண்ணத்தில் வாழ்பவர்களாக உள்ளனர். இவற்றுள் ஏதேனும் ஒன்று எதிர்மறையாக நிகழும்போது மனமுடைந்து விடுகின்றனர்.

கவலைகள், எண்ணங்கள், நோக்கங்கள் என்பதெல்லாம் எல்லோருக்கும் பொதுவான ஒன்று. ஆனால், அதன்மேல் ஒரு பிடிப்பை உண்டாக்கிக்கொண்டு கவலையடைந்து அதனால் ஏற்படும் மன நலப் பாதிப்புகளிலிருந்து வெளியேறி சில மாதங்கள் அல்லது ஆண்டுகளுக்குப் பின்னர் அது குறித்து நினைக்கும்போது அவை தேவையற்றவை, அர்த்தமற்றவை என்கிற உண்மை தெரிய வரும்.

அண்மைக்காலமாக பள்ளி, கல்லூரி பாடத் திட்டங்களில் மன நலன் சார்ந்த பாடங்களைப் பயிற்றுவிப்பது தேவையான ஒன்றாகி வருகிறது. மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு மன நலன் சார்ந்த கருத்தரங்கம் போன்ற நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. அதைத் தொடர்ந்து நடத்துவதும், கண்காணிப்பதும் தேவையான ஒன்றாகும்.

மேலும், பெற்றோருக்கும் கல்லூரிக்குமான தொடர்பு சேர்க்கை பெறுவதோடு முடிந்துவிடும் நிலை தவிர்க்கப்பட வேண்டும். பருவத் தேர்வுகளின்போது பெற்றோர்- ஆசிரியர் சந்திப்பு நடத்தப்பட வேண்டும். கல்லூரிகளைப் பொருத்தவரை இது கடினமான ஒன்று என்றாலும், இதன்மூலம் மன நலன் சார்ந்த பிரச்னைகளுக்குத் தீர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. மாறி வரும் சூழலுக்கு ஏற்ப மாணவர்களை மன வலிமை உள்ளவர்களாக மாற்ற வேண்டியது கட்டாயம்.

Activate Windows

